எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110,அண்ணா சாலை, சென்னை-2

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.சி.ந.வரதராவ், இணை இயக்குநர்.

ஆணையரக செ.மு. ஆணை எண். இ3/13219/2023

நாள்: 18.12.2023.

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2 – கருணை அடிப்படையில் திரு.ர.மோகனகிருஷ்ணன், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – 11.05.2023 முற்பகல் பணியேற்றது – தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 11.05.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – 11.05.2023 முற்பகல் முதல் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. இயக்கக செயல்முறை ஆணை எண்.பி1/19238/2020, நாள் 11.05.2023.
2. இயக்கக செயல்முறை ஆணை எண்.இ3/13219/2022, நாள்:11.05.2023.
3. இயக்கக கடித எண்: இ3/13219/2022, நாள்:19.07.2023.
4. அரசாணை நிலை எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
6. அரசாணை (4ப) எண்: 06, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1-2)த்துறை, நாள்:27.09.2023.

-----

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அரசு மைய அச்சகம், சென்னை-1ல் வெப் ஆப்செட் டெக்னீஷியனாகப் பணிபுரிந்து 08.01.2020 அன்று காலஞ்சென்ற திரு.க.ரவி, என்பவரின் வாரிசுதாரரான அவரின் மகன் திரு.ர.மோகனகிருஷ்ணன், என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பொது கல்வி தகுதியான பத்தாம் வகுப்புப் தேர்ச்சி மற்றும் வயது தகுதி உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளதைத் தொடர்ந்து, பார்வை 1-ல் காணும் 11.05.2023 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2ல் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

2) பார்வை–1 மற்றும் 2ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 11.05.2023 முற்பகல் பணியேற்பு செய்து ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

3) கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாளான 11.05.2023 முற்பகல் தனியரது பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை பெற்று வழங்க கோரி பார்வை–3ல் காணும் 19.07.2023 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

4) பார்வை 6–ல் காணும் அரசாணை (4ப) எண்: 06 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த்துறை, 27.09.2023 நாளிட்ட அரசாணையில் அரசாணை (நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(M)த் துறையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020–ன்படி பரிசீலனை செய்து, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ர.மோகனகிருஷ்ணன், என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சு பணியில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 11.05.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்குரிய உடற்தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன் முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

5) மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவராகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த 11.05.2023 முற்பகல் அன்று உடல் தகுதி குறித்த மருத்துவ தகுதிச் சான்றிதழினை சமர்ப்பித்துள்ளார். தனியர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழின்படி, தனியர் அரசுப்பணியில் சேருவதற்கான உடல் தகுதியை பெற்றுள்ளார்.

7) பார்வை 6–ல் காணும் அரசாணை (4ப) எண்: 06, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த்துறை, 27.09.2023 நாளிட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ர.மோகனகிருஷ்ணன், இளநிலை உதவியாளரின் தற்காலிக பணியினை, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 11.05.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, அந்நாள் முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

8) தனியர், மேற்படி இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்றும் தகுதிகாண் பருவ காலத்தில் ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் என்றும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

9) தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களுக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

சி.ந.வரதராவ்,
இணை இயக்குநர்.

**பெறுநர்**

திரு.ர.மோகனகிருஷ்ணன்,
இளநிலை உதவியாளர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
ஆணையரகம், சென்னை-2.
(இணைப்பு அரசாணை (4ப) எண்: 06, தமிழ் வளர்ச்சி
மற்றும் செய்தி (எஅ1-2)த்துறை, நாள்:27.09.2023)

**நகல் பெறுநர்**

1. ஆணையரின் நேர்முக உதவியாள்ர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2.
2. உதவி இயக்குநர் (நிருவாகம்), எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2.
3. சம்பள கணக்கு அலுவலர், சம்பள கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை-8.
4. கண்காணிப்பாளர் 'எச்' எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2.
5. கண்காணிப்பாளர் 'இ' பிரிவு / இ4 உதவியாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2.

உதிரி-2 நகல்கள்.

**நகல் இடம் பெறல்:**

1. ஆணையர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

26/12/23

ஆணையரின் நேர்முக உதவியாளர்

ஆணையரின் நேர்முக உதவியாளர்
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்

26/12/23